Y M C A

[illegible] நூலகம்

Y.M.C.A

சமஷ்டி முறை தீர்வு; புலிகளுக்கு அனுப்பப்படும்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சனைக்கு 'சமஷ்டி' முறையிலான தீர்வு குறித்து அரசு புதிய யோசனை ஒன்றைத் தயாரித்துள்ளது. இந்த யோசனை வெகுவிரைவில் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த சமஷ்டிமுறையோசனை விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 83 ஆனி 5 துல்ஹஜ் 6 இதழ் 128

யாழ்ப்பாணம் புதன்கிழமை 19-06-1991

ஆசிரியரை விடுவிக்கக் கோரி ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்திடம் சிக்கியுள்ள ஆசிரியர்களை விடுவிக்கக் கோரியும், தமிழர் படுகொலைகளைக் கண்டித்தும் யாழ்ப்பாணத்தில் பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரியர்களால் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

[4ம் பக்கம் பார்க்க]

6 ஆண்கள் வெட்டிக் கொலை பெண் சுட்டுக் கொலை

[மட்டுநகர்]

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நாகுதன்தீவு என்னுமிடத்தில் ஆறு பொதுமக்கள் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்டனர். இதேவேளை பெண் ஒருவரும் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

(4ம் பக்கம் பார்க்க)

● ஐந்தாவது நாளாக

வவுனியாவில் உக்கிர மோதல்

நாற்பது இராணுவத்தினர் பலி

(வவுனியா)

வவுனியா [சின்னத்தம்பனை பிரமனாலயங்குளத்தில் நேற்று ஐந்தாவது நாளாக வடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருச்குமிடையில் கடும்மோதல் இடம்பெற்றது. 5 நாள் மோதலில 40 படையினருக்கு மேல் கொல்லப்பட்டுள்ளதுடன் ஐம்பதிற்குமதிகமான இராணுவத்தினர் படுகாயமடைந்த நிலையில் தொடர்ந்து முன்னேற முடியாது திண்டாடுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியாவிலிருந்து மன்னார் வீதி வழியாக மடு நோக்கி முன்னேற முயலும் இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

இத்தாக்குதலுக்கு உதவியாக இரு ஹெலிகொப்டர்கள், இரு பொம்மர்கள், இரு அவ்ரோக்கள் பலத்த குண்டுத் தாக்குதலையும், துப்பாக்கிப் பிரயோகத்தினையும் நடாத்தி வருவதாகவும் இந்நிலையில் புலிகளின் எதிர்த்தாக்குதலினால் மேலும் பலத்த இழப்புகளைச் சந்தித்த நிலையில் படையினர்

(4ம் பக்கம் பார்க்க]

225 தமிழர்கள் சுட்டுக்கொலை

(மட்டுநகர்)

கொக்கட்டிச்சோலையில் 225 தமிழர்கள் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பலர் தொடர்ந்தும் ஆபத்தான நிலையிலிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ரி)

புலிகள் சுட்டு ஹெலி விழுந்தது நேரில் பார்த்தவர்கள் தகவல்

(கொழும்பு)

வவுனியாவில் கடந்த ஞாயிறு விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் தான் ஹெலிகொப்டர் விழுந்து நொருங்கியதாக இச்சம்பவத்தை நேரில் பார்த்த பொதுமக்கள் தெரிவித்ததாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட இந்தக் ஹெலிகொப்டர் இயந்திரக் கோளாறினால் விழவில்லை, புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

புலிகளின் இத்தாக்குதலையடுத்து அங்கு தாக்குதலிலீடுபட்டிருந்த ஏனைய விமானங்களும் உடனடியாக அவ்விடத்தை விட்டு அகன்றுவிட்டனவாம்.

[ரி[

படையினருக்கு பெரும் கஷ்டம்

(கொழும்பு)

தற்போது நடந்துகொண்டிருக்கும் யுத்தத்தில், வடமாகாணத்தின் சில பகுதிகளை இராணுவத்தினர் கைப்பற்றினாலும், அப்பகுதிகளைத் தொடர்ந்தும் அவர்களால் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது என்று கொழும்பில் உள்ள இராணுவ வட்டாரங்கள் கருதுகின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

★ இலங்கை பிரயத்தனம்

(இலங்கை)

பிரிட்டனின் இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் திரு.டேவிட் கிளாஸ்ரோன், இலங்கை அரசினால் வெளியேற்றப்பட்டமை குறித்து பிரிட்டன் கடும் சினம் கொண்டுள்ளது.

இதை எப்படியும் சமாதானம் செய்து, அதற்கான காரணகாரியங்களைக் காட்டி, பிரிட்டனின் சீற்றத்தைத் தணிக்க இலங்கை அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்துவருகிறது.

(பூ)

இந்திய குழு இலங்கை வருகிறது

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையியே பொருளாதார வர்த்தக ரீதியான நல்லுறவுகளை வளர்த்துக் கொள்வதற்காக இந்திய வர்த்தக சம்மேளனத்தின் பிரதிநிதிகள்

(4-ம் பக்கம் பார்க்க)

ஆயுதக் கொள்வனவில் அமைச்சர் கொள்ளை லாபம்!

[கொழும்பு]

சிறிலங்கா ஆயுதபடையினருக்கு வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்படும் இராணுவ தளபாடங்கள் சிறிலங்காவின் முன்னணி அமைச்சர் ஒருவரும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் முக்கியஸ்தர் ஒருவரும் பெருமளவில் லாபம் சம்பாதித்து வருவதாக 'சிங்களவார பத்திரிகை' ஒன்று தெரிவித்துள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

ரஞ்சன் குடும்பம் 'பிரேமா' லடாய்

(கொழும்பு)

அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னவின் எம். பி. பதவி அவரது மகனுக்கு வழங்கப்படுமென ஜனாதிபதி பிரேமதாசா முன்னர் கூறியபோதும் அதனை நிராகரித்ததையடுத்து

[4ம் பக்கம் பார்க்க]

இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக எழுச்சிப் பேரணி

[யாழ்ப்பாணம்]

இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று வலிகாமம் மக்களால் எழுச்சிப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

வலிகாமம் வடக்கு புனர்வாழ்வுக்கழகத்தின் ஏற்பாட்டில் இந்த எழுச்சிப்பேரணி நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை துர்க்கையம்

(4ம் பக்கம் பார்க்க)

இந்திய பிரதமர் பதவிக்கு நரசிம்மராவ்-பவார் இழுபறி

[புதுடில்லி)

இந்தியாவின் புதிய பிரதமர் யார் என்பதில் காங்கிரஸ் தலைவர்களிடையே பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. திரு. நரசிம்மராவும், மஹாராஷ்ரா முதல்வர் திரு. சரத் பவாரும் இப்பதவிக்குப் போட்டியிடுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை எந்தக்கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்காத நிலையில் இந்திரா காங்கிரஸ் தனதுகூட்டணியை விட தேசிய முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருகிறது.

[4ம் பக்கம் பார்க்க]

வரி விளம்பரம்

CCC

Apprenticeship in Pharmacy வகுப்பு 26-06-91 சனிக்கிழமை தொடக்கம் C. C. C. கிளினிக்கில் நடைபெறவுள்ளது. கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு சொள்ளவும். உரிமையாளர், C, C. C. Clinic, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (எ 1382)

புலமைப்பரிசில் பரீட்சை (ஆண்டு 5)

புலமைப்பரிசில் மாணவர்களுக்கு Paper Class (புதிய பிரிவு) 19-06-91 புதன் பி. ப. 3-30 ஆரம்பமாகிறது. வகுப்புக்கள் சனி, ஞாயிறு 10-30—12-30 நடைபெறும். பரீட்சை 30-06-91 ஞாயிறு மு. ப. 8-00/ மு. ப. 10-00/ பி. ப. 1-00. 219, நாவலர் வீதி யாழ்ப்பாணம் பி ப,4-00 மக்கள் வைத்தியசாலை முன்பாக, கொக்குவில் மேற்கில் நடைபெறும். (சி-4868)

தவறிவிட்டது

சிவனு சிவபாலயோகி என்பவருடைய அடையாள அட்டை இல. 71146 856X2 மற்றும் ரொக்கப்பணம், பகவானின் படம், யந்திரத்தால் கிறிய துர்க்கையின் படம் கடிதம், மணிப்பேசுடன் [அதன் நிறம் கறுப்பு] யாழ்ப்பாணம் வீதியிலுள்ள கடை ஒன்றில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். V. முத்துக்குமாருக்குருக்கள், 'சிவபதி', கந்தரோடை மேற்கு, சுன்னுகம். (சி 4872)

ஜோதிடம்

வாழ்க்கைப் பிரச்சனை, தொழில், கல்வி, விவாகம் ஆகியவற்றின் தடைகள் மற்றும் எல்லாப் பிரச்சனைகளும் ஆராய்ந்து சரியாக நிவாரணம் கூறப்படும். பலன் தவறினுல் பணம் திரும்பப்பெற உத்தரவாதம. ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறைவீதி. [அரசடிச்சந்தி] நல்லூர். [சி 4873]

புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம்

மூளாய் - வரதன்புலோ ஸ்ரீ சித்திவிஞயகர் — ஸ்ரீ முத்துக்குமாரசாமி தேவஸ்தான புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டவிழா எதிர்வரும் ஆனி 10ம் நாள் (24-6-91)திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருவதோடு, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தேர்த்திருப்பணிச் சபை.

(சி 4870)

ஓராண்டு நினைவஞ்சலி



சின்னம்மா வைத்தியலிங்கம்

கருங்காலி, காரைநகரைச் சேர்ந்த இளைப்பாறியவரும், காலஞ்சென்ற திரு. வைத்தியலிங்கத்தின் அன்பு மனைவி சின்னம்மா 16-6-90ல் சிவபதமடைந்தார். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கருங்காலி போசுட்டி முருகனைப் பிரார்த்திக்கிறோம்.

மக்கள், மருமக்கள். பெருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

பாக்கிய பவனம்,
தொல்புரம்.

(சி 4839)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணக் கிளை.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு

அங்கத்தினர் கூட்டம்

மேற்படி கூட்டம் 22-06-1991 சனிக்கிழமை பி. பகல் 3-00 மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் நடைபெறும். சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அங்கத்தினர் அனைவரையும் இதில் பங்குபற்றிக் கொள்ளும்படி அழைக்கின்றோம். இதில் புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறும்.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்.

73, கண்டி ரோட்,
யாழ்ப்பாணம்,
17-06-1991.

(ஏ 1388)

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ.
சங்கம் (வரைவுள்ளது)

அறிவித்தல்

அங்கத்தவர் இடாப்பு முடிவுறுத்தல் 30-06-1991.

மேற்படி சங்கத்தின் சகலகிளைகளிலும் 30-06-1991ல் அங்கத்தவர் இடாப்பு முடிவுறுத்தப்பட இருப்பதால் புதிதாக அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் படிவங்களை நிரப்பி ரூபா பத்து அங்கத்துவப் பணத்தை அந்தந்தக் கிளைகளில் செலுத்தி 30-06-91 திகதிக்கு முன்னர் சேரும்படி கேட்கப்படுகின்றீர்கள். ஒரு முழுப் பங்கின் தொகை ரூபா பத்து (10/-) ஆகும்.

முக்கிய கவனிப்பு :

எதிர்வரும் கிளைக்குழுத் தெரிவு இதன் அடிப்படையில் நடைபெறவுள்ளது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆ. நாகராசா
செயலாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.

(ஏ 1387)

12-வது ஆண்டு நினைவஞ்சலி

திருமதி இராசமணி மகேசன்

தோற்றம்: 02-02-1909
மறைவு: 19-06-1979

ஆண்டுகள் பல சென்றாலும்
தங்கள் நினைவுகள் எம் மனதை விட்டு அகலா

அன்பு மறவாத
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்,
நண்பர்கள்.

லிங்கவாசா,
நவாலி.

[சி 4871]

தொழிற்பயிற்சிகள்

- ★ **றேடியோ, T. V. வீடியோ டெக் றிப்பியறிங்**
  சகல இன றேடியோ, T. V. வீடியோ டெக் திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
  காலம்: 5 மாதம்
- ★ **COMPUTER PROGRAMMING**
  Basic, Cobol, d Base III +, Word Processing, Lotus 1-2-3
  பயிற்சியளிக்கப்படும்.
- ★ **றீவைண்டிங்**
  மின்மோட்டார், மின்விசிறி, ரான்ஸ்போமர், எலெக்ரிக்கல் உபகரணங்கள் றீவைண்டிங் செய்தல். ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
  காலம்: 4 மாதம்
- ★ **எலெக்ரிக்கல் வயறிங்**
  வீட்டு மின்சாரவேலை, மின்சார உபகரணங்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
  காலம்: 2 மாதம்
- ★ **AIR CONDITION & REFRIGERATION ENGINEERING**
  சகல இன குளிர்சாதனங்கள் திருத்துதல் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
  காலம்: 4 மாதம்
- ★ **புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பம்:**
  24 - 06 - 1991 (கிழமை நாட்கள்)
  22 - 06 - 1991 (சனி, ஞாயிறு)

JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவை அருகாமை மேல்மாடி)

(ஏ-1389)

★ ஆண்டுதோறும் பத்து நாட்களுக்கு

தமிழ்ஈழமெங்கும் முத்தமிழ் விழா சித்திரைப் பெருவிழாவாக நடக்கும்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் பிரகடனம்

முத்தமிழ் விழாவை வெறும் பொழுதுபோக்கிற்கான கலைவிழாவாக நாம் சொண்டாடவில்லை எமது தமிழீழ மண்ணை மீட்கும் போரை வீறுகொள்ள வைப்பது, எமது மொழியை பிறமொழி ஊடுருவல்களிலிருந்து பாதுகாப்பது எமது கலை பண்பாடுகளைப் பேணிப்பாதுகாப்பது எமது கலைஞர்களையும் இலக்கிய வாதிகளையும் ஊக்குவித்து புதிய புரட்சி இலக்கியங்களை எழுச்சிக் காவியங்களை உருவாக்க உழைப்பது இவை போன்ற உன்னத நோக்கங்களுக்காகவே விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினராகிய நாங்கள் முத்தமிழ் விழாவை நடாத்திக் கொண்டிருக்கின்றோம்.

இவ்வாறு முத்தமிழ் விழா இறுதிநாளன்று விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டு கழகத்தால் விடுக்கப்பட்ட பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பிரகடனத்தில் மேலும் தெரிவிக்கையில்;

இந்த முத்தமிழ்விழா இனிமேல் ஆண்டுதோறும் சித்திரைப் பெருவிழாவாக பத்து நாட்கள் நடத்தப்படவிருக்கிறது. இம்முறை யாழ் குடாநாட்டில் நடைபெற்ற இந்த முத்தமிழ் விழா அடுத்துவரும் ஆண்டுகளில் வன்னி, திருமலை. மன்னார், மட்டக்களப்பு என தமிழீழத்தின் சகல பகுதிகளிலும் கொண்டாட வேண்டுமென்று விரும்புகின்றோம்.

ஆண்டுதோறும் முத்தமிழ் விழாவின்போது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் தமிழீழ மக்களுக்காகவும், மண்ணுக்காகவும் பணிபுரிந்த மாமனிதர்கள் பதின்மரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு தமிழீழத் தேசிய விருது வழங்கப்படும். சிங்கள அரசு எமது கலைஞர்கள்,எழுத்தாளர்களைப் புறக்கணித்து ஒதுக்கி வரும் வேளையிலே தாயக மீட்புப் போரை நடத்திக் கொண்டிருக்கும் எமது இயக்கம் ஒரு அரசாக அமையாவிட்டாலும் கூட ஒரு அரசுதன்னாட்டுக் கலைஞர்களுக்கும்எழுத்தாளர்களுக்கும் எந்தெந்த வகையில் ஊக்கமும் உதவியும் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் எமது கலைஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் கிடைக்கச் செய்வதற்கு எமது இயக்கம் முயற்சிக்கும்.

சிங்கள அரசினால் பல்லாண்டு காலமாக ஒதுக்கப்பட்டு–புறக்கணிக்கப்பட்டு வரும் எமது கலைஞர்கள், எழுத்தாளர்கள் போன்றோர்க்கு உதவியளித்து அவர்களை ஊக்குவிக்கும் வகையில் எமது கலை பண்பாட்டுக் கழகம் பல திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தும். சிற்ப ஓவியக் கலைஞர்களுக்கென சிற்ப ஓவியக்கூடங்களும், தமிழ்க் கூத்துக் கலைஞர்களுக்கென கூத்துப் பட்டறையும். இசைக் கலைஞர்களுக்கென ஒரு ஒலிப்பதிவுக் கூடத்தையும் அமைத்து எமது கழகம் ஊக்குவிக்க உள்ளது. எழுத்தாளர்கள்,கவிஞர்களின் ஆக்கங்களை வெளிக்கொணரும் பொருட்டு விரைவில் ஒரு இலக்கிய இதழை எமது கழகம் வெளியிடவுள்ளது. எமது விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் சார்பில் சிறந்த எழுத்தாளர்கள், கலைஞர்கள், பாவலர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மதிப்பளித்து ஊக்குவிக்குமுகமாக சிறுகதை, நாவல், பாடல், கிராமியக் கலைகள், கூத்துக்கள் போன்றவற்றிற்கான போட்டிகள் நடாத்தி பரிசுகள் வழங்கப்படும்.

அத்துடன் எம் அருந்தமிழ் மொழியை மாற்றுமொழி ஊடுருவலிலிருந்துபாதுகாத்து எங்கும் எதிலும் தூயதமிழ் மொழியை நாம் பயன்படுத்த விழைகின்றோம். இதன் முதற்படியாக கால்கோள் நிகழ்வாக எமது கலை, கலாச்சார பிரிவை கலை, பாண்பாட்டுக் கழகமென மாற்றியமைத்துள்ளோம். கலை, பண்பாட்டுத் துறை எமது இயக்கத்தின் ஒரு பிரிவு என்று கூறுவதை விட எமது இயக்கத்தின் அனைத்துத் துறையினரதும் பங்களிப்புக்களும் படைப்புக்களும் அதற்குத்தேவை என்ற நிலையில் கலை, பண்பாட்டுத் துறையை எமது இயக்கத்துக்குள் ஒரு பிரிவாக அல்லாது கழகமாக ஆக்குவது அமைப்பது சிறப்பானது - பொருள் உள்ளது என நாம் எண்ணியதனால் இதுவரை கலை, கலாச்சாரப் பிரிவு என நாம் அழைத்து வந்ததை அதிலிருந்த கலாச்சாரத்தை தூய தமிழிற் பண்பாடாக்கி, பிரிவைக் கழகமாக்கி கலை, பண்பாட்டுக் கழகமாக மாற்றி அமைத்துள்ளோம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்மொழிக்குள் புகுந்து கலந்திருக்கும் மாற்றுமொழிச் சொற்களை கண்டறிந்து களைவது என்பது அத்தனை இலகுவான செயலல்ல. அது தனிமனித முயற்சியினால் நிறைவேற்றப்படக் கூடிய செயலுமல்ல என்பதை நாம் நன்கு அறிவோம். எனவே தமிழ் மொழியைத் தூய்மைப்படுத்த தமிழ் மக்களாகிய நாம் தமிழியக்கம் கண்டாகவேண்டும், அந்தத் தமிழியக்கம் பல்வேறு மட்டங்களிலும் விரைந்து செயற்பட்டாகவேண்டும். தமிழ் மொழியைத் தூய்மைப்படுத்தும் கோட்பாட்டைக் கொண்ட ஒரு தனித்தமிழ் இயக்கத்தை தமிழகத்தில் தமிழ்க்கடல்திரு. வி க. மறைமலையடிகள் தேவநேயப் பாவணர், பாரதிதாசன் போன்றோர்கள் கண்ட தமிழியக்கம் போன்ற தமிழியக்கத்தை அனைத்துத்துறை சார்ந்த அறிஞர்களை உள்ளடக்கியதாக நாம் தோற்றுவிக்கவேண்டும். அந்தத் தமிழியக்கம் தமிழ் மொழியைத் தூய்மைப்படுத்த அனைத்து வழிவகைகளையும் கண்டறிந்து செயற்படவேண்டும்.

பல்கலைக்கழக மட்டத்தில் தமிழ் மொழியைத் தூய்மைப்படுத்துவதற்கென ஒரு தனித்துறை தோற்றுவிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். நாம் பயன்படுத்தும் வேற்றுமொழிச் சொற்களுக்கு எம் மொழியில் சொற்கள் இல்லாதவிடத்து ஏற்ற மாற்றுச் சொற்களை தமிழிற் தோற்றுவிப்பதற்கென தமிழறிஞர்களையும், மாற்றப்படவேண்டிய சொற்களை அறிய துறை சார்ந்த வல்லுநர்களைக் கொண்ட குழுக்கள் துறைதோறும் அமைக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

அன்னை தமிழுக்கு அரியணையில் இடம் கிடைக்கவில்லை என்பதனாலேயே எமது மொழி உரிமைப்போராட்டம் முதலில் முகிழ்த்தெழுந்தது. அந்தப் போராட்டம் பெருவளர்ச்சி கண்டு ஆயுதப்போராக விடுதலைப்போராக மாறி இன்று நாம் எமது தமிழீழ மண்ணை மீட்டு எமது மொழியை அரியணையில் ஏற்றும் நாளை நெருங்கிக்கொண்டிருக்கிறோம் விரைவில் எமது மொழியை அரியணையில் ஏற்றுவோம். இதில் ஐயமில்லை. ஆனால் அரியணையில் ஏற்றப்படும் அந்த மொழி எம் தமிழ்மொழியாக இருக்குமா என்பது எமக்குப் பேரய்யம் ஏற்படுகின்றது. வழிபாட்டு மொழியாக வடமொழியையும் இசைமொழியாக தெலுங்கையும் நீதிமன்ற மொழியாக ஆங்கிலத்தையும் நீண்டகாலமாக ஏற்று வந்திருக்கும் நாம் எமது மொழிச் சொற்கள் எவை எமது மொழியில் கலந்துவிட்ட பிறமொழிச் சொற்கள் எவை என்பதை வேறுபடுத்தி அறிய முடியாது அல்லலுறுகின்றோம். நாம் தற்பொழுது பேசுகின்ற மொழியை அரியணையில் ஏற்றினால் இருபது விழுக்காடு தமிழ் மொழியையும் எண்பது விழுக்காடு மாற்றார் மொழிகளையும் அரியணையில் ஏற்றுகின்றோம் என்றுதான் பொருளாகும் எனவே எமது தமிழன்னையை குற்றுயிரும் குறையுயிருமாகத் தான் நாம் அரியணையில் ஏற்றப்போகின்றோமா?

முத்தமிழ் விழா நடத்தும் வேளையில் நம்மைநாமே கேட்டுக்கொள்ளவேண்டிய கேள்வி இது. எனவே தமிழீழ மீட்புப் போரில் நாம் முழு வெற்றி காணும் நாளில் எமது மொழியை மாற்றுமொழிக் கலப்புகளிலிருந்து ஊடுருவல்களிலிருந்து வேறுபடுத்தும் மொழிமீட்புப்போரிலும் நாம் வெற்றி கண்டாக வேண்டும்.

இந்நிலையில் மண்மீட்புப் போருக்கு வீறுசேர்க்கும் வகையிலான இலக்கியங்களையும் கலைப்படைப்புக்களையும் எமது எழுத்தாளர்கள், கலைஞர்கள் வழங்க முன்வரவேண்டும். அது எமது எழுத்தாளர்கள் கலைஞர்களின் கடமையாகும். எமக்கு இன்று தேவையானது விடுதலை இலக்கை நோக்கிய இலக்கியங்களும், கலைப்படைப்புக்களுமே தவிர வெறும் பொழுதுபோக்குக் கலைகளும் இலக்கியங்களுமல்ல. எழுத்தாளர்கள் இலககற்ற இலக்கியங்கள் படைப்பதைவிட்டுபுரட்சிகர போராட்ட உணர்வை வெளிப்படுத்தக்கூடிய எழுச்சி இலக்கியங்களை - காலத்தால் அழியாத காவியங்களை படைக்க முன்வரவேண்டும். அதுபோன்றே பாவலர்களும் தமிழினத்திற்கு எழுச்சியூட்டக்கூடிய பாடல்களை ஆக்க வேண்டும், பாடவேண்டும். கலைஞர்கள் எமது உயிரினும் மேலான விடுதலைப் போரை வெற்றியின் திசைவழி நோக்கி இட்டுச் செல்லக்கூடிய கலைப் படைப்புக்களை ஆக்கவேண்டும். தமிழீழத்தின் முழுமையான விடுதலை நோக்கிய பாதையில் போராளிகளுடன் கலைஞர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள் உட்பட அனைத்து தமிழீழ மக்களும் அணிதிரண்டு விடுதலை நோக்கிய வழி நடப்போம். (வி)

ராஜீவ் - வெற்றி

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி தாம் போட்டியிட்ட அமேதி தொகுதியிலும் திருமதி மரகதம் சந்திரசேகர் ஸ்ரீ பெரம்புத்தூர் தொகுதியிலும் அமோக வெற்றியீட்டினர்.

ராஜீவ் காந்தி இரண்டு லட்சம்அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றார். திருமதி மரகதம் சந்திரசேகர் வெற்றி பெற்ற ஸ்ரீ பெரம் புத்தூர் தொகுதியில் கடந்த மாதம் 21-ம் திகதி ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டது தெரிந்ததே (க)

தேவிலால் தோல்வி

(புதுடில்லி)

துணைப்பிரதம மந்திரியும் சமாஜவாதி ஜனதாள்கட்சி தலைவருமாகிய திரு.தேவிலால் இந்திராகாங்கிரஸ்வேட்பாளர் திரு. புபேந்திர சிங்கிடம் 35,000 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்

இவர் லோக்தள் நாடாளுமன்ற தொகுதியிலும், கிராய் சட்டப்பேரவை தொகுதியிலும் போட்டியிட்டு தோற்றுப் போய்விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

தோல்வியடைந்தோர் விபரம்

லோக்சபா தேர்தலில் தோல்வியடைந்த முக்கியமானவர்கள் விபரம் வருமாறு முன்னாள் அமைச்சர் நட்வார் சிங், முன்னாள் கிரிக்கெட் கப்டன் அலிகான் நவாப்பட்டோடி, தினேஸ்சிங் ஆகியோர் காங்கிரஸ் சார்பில் தோல்வியுற்றவர்களாவர்.

சமாஜவாதி ஜனதாதள்ளில் அமைச்சர் சுபோத்கான் சகாய், உட்பட முக்கிய அமைச்சர்கள் பலர் படு தோல்வியடைந்துள்ளனர்.

ஆளும் கட்சிகள் தோல்வி

தமிழ்நாடு, கேரளம், ஹரியானா, புதுச்சேரி சட்டசபையில் ஆளும் கட்சிகள் படுதோல்வியடைந்துள்ளன. மேற்படி 4 சட்ட சபைகளிலும் இ. காங்கிரஸ் அமோக வெற்றி பெற்றுள்ளது.

தமிழகம் - தி. மு. க. கேரளம் - இந்திய கம்யூனிஸ்ட், ஹரியானா-சமாஜவாதிஜனதாதள், புதுச்சேரி - தி. மு. க முன்பு ஆட்சியிலிருந்ததும் தெரிந்ததே. [சி]

தென்மராட்சியில் இன்று பேரணி

(சாவகச்சேரி)

சிங்கள இராணுவத்தால் பாதிப்படைந்த தென்மராட்சிப் பிரதேச மக்கள் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை இன்று புதன்கிழமை நடாத்தவுள்ளனர். புத்தூர்ச் சந்தியிலிருந்து காலை எட்டு மணிக்கு ஆரம்பமாகும் இப்பேரணி சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையைச் சென்றடைந்து அங்கு உதவி அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றையும் கையளிக்கவுள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் இழப்புக்கள் நஷ்டங்கள் என்பன இவ்மகஜரில் சுட்டிக்காட்டப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (155)

இராசி பலன்

19-06-1991

புதன்கிழமை

அட்டமி பி. இ. 2-55 வரை உத்தரம் பி. இ. 2-29 வரை, இராகுகாலம் காலை 11–54 முதல் பகல் 1-24 வரை, சுப நேரம் மாலை 4-24முதல் 5-54 வரை.

மேஷம்: புரியாதபுதிர், அவசர அழைப்பு, தொழில் சிறப்பு

இடபம்: கடுமையான உழைப்பு, எதிரிகள் தலையீடு, மறதி.

மிதுனம்: வருவாய்பாதிப்பு குடும்பத்தில் சிக்கல், செலவு

கடகம்; தொழில்லாபம், பயணங்களால் நன்மை,காரிய சித்தி.

சிங்கம்: இனசன உதவி, கடமையுணர்வு உடல்உபாதை

கன்னி: பிறர் அறிவுரை, மனத்தாங்கல், குடும்பசுகம்.

துலாம்: அசாத்திய துணிவு, சகோதர விரோதம், தொழில் கஸ்டம்.

விருச்சிகம்: வெற்றியின் முன்னேற்றம், வாக்குவன்மை, தெய்வ வழிபாடு

தனுசு: அரியசெயல், நற்செய்தி, வாழ்க்கை வசதி.

மகரம்: தடுமாற்றம், மனக்குறைபாடு, குடும்பக் கஷ்டம்.

கும்பம்: உடல்நிலை பாதிப்பு, தகாத நட்பு, வெறுப்பு.

மீனம்: காரிய பலிதம், குடும்ப உல்லாசம், தொழில் மதிப்பு.

• ஜோஸ்யர்

யோகர் சுவாமி குருபூசை

[கொழும்புத்துறை]

யோகர் சுவாமிகள்குருபூசை இன்று 19ந் திகதி புதன்கிழமை காலை10 மணிக்கு புங்கன்குளம் யோகர் சுவாமிகள்மகளிர் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது. யோகர் சுவாமிகள் நற்சிந்தனைகள், பஜனைக்கூட்டுப் பிரார்த்தனைகளும் இடம்பெறும். இதற்கான சகல ஏற்பாடுகளையும் புங்குடுதீவு சர்வோதய அமைப்பாளர் க. திருநாவுக்கரசு செய்துவருகின்றார். (154)

“ஒரு வருடத்திற்குள் அகதிகள் திரும்பவேண்டும்’

(சென்னை)

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரும் இலங்கை திரும்ப வேண்டும் என செல்வி ஜெயலலிதா மீண்டும் வலியுறுத்தி உள்ளார்.

இலங்கைத் தமிழ் அகதிகள் குறைந்தது ஒருவருடத்திற்குள் இலங்கை திரும்பியே ஆக வேண்டுமென்றும் வலியுறுத்திக் கூறியுள்ளார். [சி]

ராஜீவ் கொலை:

குற்றப் பத்திரிகை தாக்கல்

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையில் தீவிர ஈடுபாடு வகித்தாரென சந்தேகத்தின் பேரில் இலங்கைத்தமிழ் இளைஞர் ஒருவருக்கு எதிராக தமிழ்நாடு நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தியபுலனாய்வுக்குழுவினர் இந்தக் குற்றப்பத்திரிகையை நேற்றுமுன்தினம் தாக்கல் செய்தனர்.

சாவகச்சேரியைச் சேர்ந்த முருகன் என இந்த இளைஞர் அடையாளம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (

மட்டக்களப்பில் மாத்திரம் ஒரு வருட காலத்தில்

3,586 தமிழர் படுகொலை

[மட்டக்களப்பு]

வடக்கு-கிழக்கில் யுத்தம் ஆரம்பமாகி கடந்த ஒரு வருட காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்ல் மாத்திரம், 3,586 தமிழர் சிறிலங்கா இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டும், 1,790 பேர் படுகாயங்களுக்கும் உள்ளாகி உள்ளனர்.

மேற்படித் தகவல், பூரண புள்ளி விபரங்களுடன் மட்டக்களப்புக் கச்சேரியில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பலர் காணமற் போயுள்ளனர். இது தொடர்பாகவும் புள்ளி விபரப் பதிவு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்களில் பலர் தமது சேத விபரங்களைப் பதியவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-சி)

கடற்படை - இராணுவம் இணைந்து ரோந்து

(ஊர்காவற்றுறை)

காரைநகரில் நிலைகொண்டுள்ளஇராணுவத்தினர்காரைநகர் கடற்படையினருடன் சேர்ந்து சுருவில்வரை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனராம்.

பெருமளவு இராணுவத்தினர் விசைப்படகு மூலம் சுருவில் முகாமுக்கு வந்துள்ளனர் எனவும் தெரியவருகிறது.

சரவணைப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் அடிக்கடி ஷெல் தாக்குதலையும் மேற்கொண்டும் வருகிறார்களாம். (59)

காரைநகர் மக்கள் நயினை செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

நயினை நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த் திருவிழாவிற்கு, காரைநகரில் தற்போது சிக்கியுள்ள பொதுமக்கள் அனைவரும் செல்ல அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தீவுப்பகுதியை தவிர்ந்த ஏனையவர்களும் தேர்த்திருவிழாவிற்கு செல்லலாமென்றும் தற்போது தெரிவிக்கப்படுகிறது. (சி)

கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க யாழ்.மாவட்ட (வலிகாமம், வடமராட்சி தென்மராட்சி, தீவகம்) கொத்தணி தொடர்பாளர், கிராமியத் தொடர்பாளர்களுக்கான [ஒன்றுகூடல்] நாளை வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

லோக்சபா முடிவு

மொத்தத் தொகுதிகள்	543
தேர்தல் நடந்தது	511
வெளியான முடிவுகள்	448
இந்திரா காங்கிரஸ்	215
பாரதீய ஜனதா	96
ஜனதா தள்	39
மார்க்சிய கம்யூனிஸ்ட்	34
அ. தி. மு. க	11
தெலுங்கு தேசம்	12
இந்திய கம்யூனிஸ்ட்	11
ஏனையவை	30

மரண தண்டனை

[யாழ்ப்பாணம்]

பாலியல் வன்முறையில் ஈடுபட்ட இருவருக்கு நேற்று விடுதலைப் புலிகளால் மரண தண்டனை வழங்கப்பட்டது.

நேற்று முற்பகல் முத்திரைச் சந்தையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினரான கொழும்பு கதிரேசன் வீதியை சேர்ந்த சுந்தரராஜா சுரேஸ்குமார் (காஸ்ரோ) என்பவருக்கும், நாவாந்துறைச் சந்தியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஜெகன் [வரதராஜா சிறீகாந்த் - 20 வயது] குமரன்புலம், மூளாய் மேற்கு என்பவருக்கும் இதே குற்றச்சாட்டிற்காக மரண தண்டனை வழங்கப்பட்டது.

இடம் பெயர்வு

(மன்னார்)

சிறிலங்கா இராணுவத்தின் கெடுபிடியைத் தொடர்ந்து மன்னார் தீவிலுள்ள தாழ்வுப்பாடு கிராமவாசிகள் இடம் பெயர்ந்துள்ளனர். [153]

வீரவணக்கம்

[வவுனியா]

வவுனியா குருக்களூர் என்னுமிடத்தில் நேற்று முன்தினம் காலை இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் இருபெண் போராளிகள் வீரமரணமடைந்தனர்.

திரண [பா. ஜெயராணி-அல்வாய்], கீத்தா தி.தர்சினி -தெல்லிப்பழை] ஆகியோரே வீரமரணமடைந்தவர்கள் ஆவர்.

இதே தினத்தில் மாலை ஆறு மணியளவில் இதே பகுதியில் இடம்பெற்ற மோதலில் ஜெகன் [காந்திராசா- மட்டுநகர்] என்ற போராளி வீரமரணமடைந்தார்.

வீரமரணமடைந்த மூவருக்கும் விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளார்கள் (சி)

இராணுவ

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன் ஆலயத்தில் இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகி யாழ். செயலகத்தில் முடிவடையும.

ஓராண்டு காலமாக எமது மண்ணை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தை வெளியேற்று, அரச கூட்டுத்தாபன ஊழியரின் ஊதியத்தையும், ஒய்வூதியத்தையும் ஒழுங்காக வழங்கு, விவசாய நிலங்கள்; மீன் பிடித்தளங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், வணக்கத்தலங்களை விட்டு வெளியேறு, நிவாரணங்களை சகலருக்கும் வழங்கு, பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்கு ஆகிய ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து இவ் எழுச்சிப் பேரணி நடைபெறவுள்ளது. [56- 153]

பெண்கள் முன்னணியில்

[சென்னை]

நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் 101 பெண்கள் போட்டியிட்டனர். இவர்களில் 31 பெண்கள் வெற்றி பெற்றனர். அ. தி. மு க வில் செல்வி ஜெயலலிதா உட்பட 25 பெண்களும், காங்கிரஸ் கட்சியில் 6 பெண்களும் வெற்றி பெற்றனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவை வரலாற்றில் அதிக எண்ணிக்கையான பெண்கள் தெரிவானது இதுவே முதல்தடவையாகும். [பூ]

ஆசிரியரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேரணியின் இறுதியில், யாழ். செயலக வாசலில் கண்டனக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில், வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இராணுவத்தினரால் தமிழ மக்கள் மீது நடத்தப்படும் அட்டூழியங்களையும், படுகொலைகளையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உலக மக்களுக்குத் தெரிவிக்கவேண்டும்'' என்ற கோரிக்கை விடப்பட்டது.

இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆசிரியர்களை உடன் விடுதலை செய்ய வேண்டும்; ஆசிரியர்கள் படுகொலைகளையும், அத்துமீறல்களையும் நிறுத்தவேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்துத் தயாரித்த மகஜர், மேலதிக அரச அதிபர் திரு. எஸ். சண்முகநாதனிடம், ஆசிரிய கலாசாலைச் செயலாளர் திரு. இரத்தினசிங்கம் கையளித்தார்.

இம்மகஜர்களின் பிரதிகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரி, வடமா நில கல்விப்பணிப்பாளர் உட்பட வெளிநாட்டுத் தூதுவர் காரியாலயங்களுக்கும் அனுப்பப்டுள்ளன.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.(வி153-56)

கிளிநொச்சியிலும் ஆர்ப்பாட்டம்

(கிளிநொச்சி)

பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் மீது நடத்தப்படும் விமானத் தாக்குதல்களைக் கண்டித்தும், தமிழ்மக்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்தும், குண்டுவீச்சு விமானங்களின் அச்சுறுத்தல் மத்தியிலும் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது.

அரசின் ஒடுக்குமுறைகளைக் கண்டிக்கும் சுலோக அட்டைகளைத் தாங்கியவண்ணம் ஊர்வலத்தினர் வீதியொன்றில் வந்தபோது, வானத்தில் குண்டுவீச்சு விமானம் ஒன்று பல தடவைகள் சுற்றி வட்டமிட்டது.

ஊர்வலத்தின் இறுதியில், கிளிநொச்சி அரச அதிபர், கல்விப் பணிப்பாளர், செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர் ஆகியோரிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டன. (ரி)

ஆயுதக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது சிறிலங்கா பெருமளவு இராணுவ தளபாடங்களை சீனு, பாகிஸ்தான், தென் கொரியா ஆகிய நாடுகளிலிருந்து பெருமளவில் ஆயுதங்களை கொள்வனவு செய்து வருகிறது.

சீனவிடமிருந்து ஆயுதம் பெறுவதின் பின்னணியில் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் முக்கியஸ்தர் இருக்கிறார். பாகிஸ்தானிலிருந்து ஆயுதம் பெறுவதனை பின்னணியில் முன்னணி அமைச்சர் ஒருவர் இருக்கிறார். இதில் லாபமாக பெருமளவு பணத்தை இவர்கள்சம்பாதிக்கிறார்கள் என்று அ தப்பத்திரிகைமேலும் தெரிவிக்கின்றது. [153]

சமஷ்டி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிற்கு விடப்படவுள்ளதாகவும் இத்தீர்வு யோசனையை ஆதரித்து சகல கட்சிகளும் (சுதந்திரக்கட்சி எதிர்த்தாலும்) வாக்களித்தால் இப்பிரேரணை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேறும்.

பாராளுமன்றம் கலைக்கப்படும்

இப்பிரேரணை தோல்வியுறுமாயின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் பெறும் பொருட்டு பாராளுமன்றத்தை உடனடியாக கலைப்பதற்கும் அரசுதரப்பு ஆலோசித்திருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

6 ஆண்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 14ம் திகதி இக்கிராமத்தைச் சுற்றிவளைத்த படையினர் ஆறு பொதுமக்களை கைதுசெய்து முகாமிற்குச் கொண்டுசென்ற பின்னர் வெட்டிக் கொலை செய்தனர்.

மட்டக்களப்பு புல்லுமலைக் கொலனி என்னுமிடத்தில் 12ம் திகதி தமிழருக்குச் சொந்தமான இருபது வீடுகளை தீமூட்டி எரித்த படையினர், செ. தங்கமணி என்ற பெண்ணைச் சுட்டுக் கொலைசெய்து அவரது வீட்டிற்குள் போட்டு எரித்தனர்.

இதேவேளை இப்பகுதியில் ஆறு பொதுமக்கள் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். [ரி]

8 படையினர் ப்லி

(கொழும்பு)

மணல் ஆறு (வெலிஓயா) பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கண்ணி வெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை எட்டாக அதிகரித்துள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்தாக்குதவில் 25 பேர் படுகாயமடைந்து அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கண்ணிவெடி தாக்குதலில் 'ட்ரக்' ஒன்றே சிக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

ஐந்தாவது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதாகவும் தெரியவருகிறது.

நள்ளிரவு வரையில் 40க்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்துள்ளனர் என்றும், 50க்கு மேற்பட்டபடையினர் படுகாயமடைந்துள்ளனரென்றும் தெரியவருகிறது.

இறந்தவர்களின் சடலங்களையும் காயமடைந்தவர்களை மீட்கமுடியாத நிலையில் இராணுவத்தினர் பெரும் தோல்வியைச் சந்தித்துள்ளனர்.

இப்பகுதியில் இரு பகுதியினருக்குமிடையே தொடர்ந்தும் உக்கிரமான சண்டை நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (56)

இந்திய குழு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

குழு ஒன்று அடுத்த மாதம் முற்பகுதியில் இலங்கைரவுள்ளது.

வரவிருக்கும் குழுவினர் இலங்கையில் 4 நாட்கள் தங்கியிருப்பர்.

இந்திய இலங்கை கூட்டு முயற்சிகள் முதலீடு, வர்த்தகம், தொழில்நுட்பப் பரிமாற்றம் ஆகிய துறைகளில் உள்ள வாய்ப்புக்களை இக்குழுவினர் இலங்கை அதிகாரிகளுடன் இணைந்து கண்டறிவார்கள். [பூ[

ரஞ்சன்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ரஞ்சனின் குடும்பத்திற்கும் ஜனாதிபதிக்குமிடையில் கசப்புணர்வு ஏற்பட்டுள்ளது

தந்தையின் எம். பி. பதவியை ஏற்க ஜூன் மாதம் வருவதாக மகன் ரேகான் விஜயரத்ன ஜனாதிபதிக்கு அறிவித்திருந்த போதும் அதனை ஜனாதிபதி நிராகரித்துவிட்விட்டார்.

மே மாதம் 23ம் திகதி திரு, ஆர் ஏ. டி. சிறிசேன இந்த எம். பி. பதவியை ஏற்றதும் தெரிந்ததே. இதேவேளை அமைச்சர் ரஞ்சனின் கொலை குறித்து விசாரணை கமிஷன் ஒன்றை நியமிக்குமாறு எதிர் கட்சிகள் தொடர்ந்தும் கோரி வருகின்றபோதும் அதனை ஜனாதிபதி தொடர்ந்தும் புறக்கணித்து வருகிறாராம். (153-சி)

என். டி. திவாரி தோல்வி

[புதுடில்லி[

காங்கிரஸ் முக்கிய தலைவரும் இந்திய பிரதமராக வருவாரென எதிர்பார்க்கப்பட்டவருமான திரு. என். டி. திவாரி லோக்சபா தேர்தலில் படுதோல்வி அடைந்துள்ளார். இதேவேளை இவர் சட்டசபை தேர்தலில் வெற்றிபெற்றுள்ளார்.

மேலும் சமாஜவாதி ஜனதா தள்ளில் போட்டியிட்ட மேனகா காந்தியும் தோல்வியடைந்துள்ளார். (சி]

இன்று கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

வடமாகாண எதிர்கால அபிவிருத்தியில் 'இயற்கை வளங்களின் பங்கு' என்னும் தலைப்பில் இன்று பி. ப. 3 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறை மண்டபத்தில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்திய பிரதமர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை முதல் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை ஜனதா தள் தலைவர்களுடனும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுடனும் தொடர்ந்தும் பேச்சுக்களை நடாத்தியவாறிருந்தது. ஆட்சியில் பங்கு பற்ருது காங்கிரசுக்கு பூரண ஆதரவு வழங்குவதாக சி. பி. ஐ. எம். அறிவித்துள்ளது.

இதற்கிடையில் ஆட்சியமைக்கு முன் யார் புதிய பிரதமர் என்பதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. திரு. நரசிம்மராவையே பெருமளவினர் விரும்புவதாகவும் திரு. சரத்பவாவுக்கு ஓரளவு ஆதரவு இருப்பதாகவும் கூறப்படுகிறது. இதனை சுமுகமாக தீர்க்கும் சகல முயற்சிகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது

இதேவேளை புதிய அரசில் முன்னுள் பிரதமர் திரு வி. பி. சிங்கிற்கு முக்கிய அமைச்சர் பதவி வழங்கப்படலாமெனவும் கூறப்படுகிறது. [சி]

படையினருக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்திடம் போதிய ஆளணிப் பலம் போதாமல் இருப்பதுடன், புலிகளின் அபாரமான போர்த்திறன் காரணமாகவும் இவ்வாறு செய்யமுடியாது இருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை, வவுனியாவில் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் தொடர்ந்து நடைபெறும் சண்டையில், இராணுவத்தினர் முகாம் அமைக்கமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/100306/81